உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## எழுத்து

### மேற் பிரிவு (தரம்5,6)

எழுதுவதற்கு பென்சில், தாள், அழிறப்பர் என்பன மண்டபத்தில் வழங்கப்படும்.

பங்குபற்றும் மாணவர்கள் தரப்பட்ட விடயங்களை முழுமையாக எழுத ஆயத்தமாக வரல் வேண்டும்.

நடுவர்கள் கூறும் வசனங்களை மட்டும் பந்தி பந்தியாக எழுதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளின் எழுத்துக்கள் உறுப்பமைய தெளிவாக இருத்தல் அவசியமானது.

**முயற்சி வெல்லும்**

காட்டில் வசித்த நரி ஒன்று உணவு தேடிச் சென்றது. பசியும் தாகமும் நரியை வாட்டியது. நரி அங்கும் இங்கும் அலைந்து ஒரு திராட்சைத் தோட்டத்திற்கு வந்தது. நன்றாகப் பழுத்த குலை குலையாகவுள்ள திராட்சைப் பழங்களை ஆவலுடன் பார்த்தது. பழங்களைப் பறிப்பதற்காக எட்டி எட்டிப் பார்த்தது. பழங்கள் எட்டவில்லை. நரி மனம் தளர்ந்தது. நரி மனவருத்தத்துடன் திரும்பமுயன்றபோது அவ்வழியே மான் ஒன்று வந்தது. மான் நரியிடம் ஏன் கவலையாய் இருக்கிறாய் எனக் கேட்டது. உங்களுக்கு எட்டாத பழம் புளிக்குமா என மான் கேட்டது. யாரோ வெட்டிய மரக்குற்றி உள்ளது. அதனைக் கொண்டுவந்து அதில் ஏறி பழங்களைப் பறித்திருக்கலாம் எனக் கூறியது. நரி மான் கூறியவாறு மரக்குற்றியை வைத்து அதன்மேல் ஏறி தேவையான பழங்களைப் பறித்துச் சாப்பிட்டு தனது பசியைப் போக்கியது.